சுடர் 20

கதிர் 3

# மிட்ஸ் ஜக்கிய சுடர்

ஜூலை - செப்டம்பர் 2019








ஆதரவாளர்
அருட்தந்தை. **ஜாண்குமார்**
இயக்குநர் – மிட்ஸ்

முதன்மை ஆசிரியர்
அருட்தந்தை. **அருள் ஷைஜு**
ஆசிரியர்
இணை இயக்குநர் – மிட்ஸ்

இணை ஆசிரியர்
திரு. **M.G. ஜோசப் பேட்ரிக் ஆண்டனி M.S.W**

ஆசிரியர் குழு
திரு. **ஷாஜன் ஜோசப்**, M.S.W
திருமதி. **S. வினிதா** M.S.W
திருமதி. **ஆரோக்கிய கில்டா**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
திருமதி. **P. ஜெசிந்தா**, B.Com.,

வெளியீடு
**மிட்ஸ்,**
இடைவிளாகம் – கழுவன்திட்டை
குழித்துறை – 629 163, குமரி மாவட்டம்.

**Ph : 04651-263390, 264546**
**Email : mids.marthandam@gmail.com**
**Website : mids.org.in**

அச்சிட்டவர்
**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

# உள்ளே

ஆயரின் ஆசியுரை ............ 3
இயக்குநரின் இனியமொழி ............ 4
வளங்கள் நிறைந்த உலகம் படைப்போம் ...... 5
பெண்மையை போற்றுவோம் ............ 6
புதுமைப்பெண் ............ 7
தகவல் அறிவோம் ............ 8
வாழ்க்கை படிகள் ............ 9
கவிதை தொகுப்புகள் ............ 10
உயர்கல்விக்கு வழிகாட்ட ............ 11
இயற்கை வேளாண்மை ............ 12
வாக்காளர் விழிப்புணர்வு முகாம் ............ 13
மார்ச் முதல் மே வரையிலான மிட்ஸின் உதவித்திட்டங்கள் ............ 14
அழகு குறிப்புகள் ............ 15
தளிர்கள் உலகம் - சிட்டுகளின் சித்திரங்கள் ............ 16
அன்பு மடல் ............ 19







# ஆயரின் ஆசியுரை..........

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே,

உங்கள் கைகளில் தவழ்ந்து மனதினை மகிழ்விக்க வரும் "ஐக்கிய சுடர்" இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மேலும் விடா முயற்சியுடனும், ஒருமித்த கருத்துக்களுடனும் மற்றும் தன்னம்பிக்கையுடனும் தொடர்ந்து செயல்பட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய மனிதன் இயற்கையுடனான தன்னுடைய உறவையும், தொடர்பையும் அறிந்து கொள்ளவும், ஆய்வு செய்யவும் 2015-ம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொடுத்த அழைப்பானது மனித குலத்துக்கு கொடுத்த ஓர் எச்சரிக்கை எனலாம். மனிதன் இயற்கையையும், இறைவனையும் தூக்கியெறியும் கலாச்சாரத்துக்குள் நுழைந்துவிட்டான். அதனால் சூழலியல் சீர்கேடுகளும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் மலிந்துவிட்டன. நமது மனங்களில் வாசம் செய்யும் இறைவனுடைய செயல்பாடுகளை கண்டுணர வேண்டுமானால் வெளிப்புற தோற்றங்களிலிருந்து, உட்புற தோற்றத்திற்கு செல்லும் வழக்கமான அணுகுமுறையை உபயோகிக்காமல் ஒவ்வொரு பொருளிலும் இறைவனுடைய பிரசன்னத்தை கண்டுணர முயலவேண்டும். அப்போதுதான் இயற்கையுடனான உறவை மேம்படுத்த இயலும்.

நாம் செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றும் நமக்கும், பிறருக்கும், நாட்டுக்கும் நன்மை தருவதாய் அமையட்டும். நன்மை செய்து கடந்துபோன இயேசு நம்மை நன்மையில் வழிநடத்துவார்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன்.

அன்புடன்

மேதகு ஆயர் **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆயர், மார்த்தாண்டம் மறைமாவட்டம்



# இயக்குநரின் இனியமொழி!

அன்பு சகோதர சகோதரிகளே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள் !
“உங்களுக்கு அமைதி உரித்தாகுக”

கடவுள் இவ்வுலகில் மனிதனாய் பிறந்து தன்னையே உலகிற்கு பலியாக்கியதன் நோக்கமே பாவத்திலிருந்து மக்களை விடுவித்து அவர்கள் வாழ்வில் அமைதி உருவாக செய்யவே ஆகும். அமைதியும், மகிழ்ச்சியும் மனித வாழ்வில் இன்றியமையாததாகும். உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் அமைதியும் சந்தோஷமும் நிலவ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். இந்த ஐக்கிய சுடர் இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு இந்த இதழ் உங்கள் வாழ்க்கைக்கு பயனுள்ள தகவல்களை தரும் என்று நம்புகிறேன்.

இந்த பூமியின் மாற்றம் ஒவ்வொரு தனி மனிதனாலும் நிர்ணயம் செய்யப்படுகிறது. தனி மனிதனின் மாற்றம்தான் சமுதாய மாற்றம் எனலாம். தனி மனிதன் மதத்தையும், அரசியலையும் ஏன் போர்ப் படைகளையும் விட அதிக சக்தி படைத்தவன். நமது பூமியை பாதுகாப்பதை ஒவ்வொரு தனி மனிதனும் கடமையாக கருத வேண்டும். எல்லா மக்களும் ஏன் விலங்குகள் கூட இந்த புவியை பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள நேரம் வந்துவிட்டது. எனவே உங்கள் கைகளை வந்தடையும் இந்த ஐக்கிய சுடர் விழிப்புணர்வு இதழை மேலோட்டமாக படித்து விட்டு தூக்கி எறிந்து விடாமல் இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் உட்பொருளை கண்டுணர்ந்து அதன்படி செயல்படுமாறு வாசகர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம் நாட்டின் வளர்ச்சிக்கும், பெண்கள் முன்னேற்றத்துக்கும் முக்கிய காரணியாய் அமைவது சுயஉதவிக் குழுக்களாகும். நமது மிட்ஸ் சுய உதவி குழுக்கள் உண்மைதனத்துடன் நாளுக்கு நாள் வளர்ந்துக்கொண்டே வர வேண்டும். பொருளாதார சம்மந்தப்பட்ட காரியங்களில் மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட குடும்ப, சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் சிறந்து விளங்க வேண்டும். இறைவன் மனிதனுக்கு கொடுத்த மாபெரும் கொடையாகிய சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை கண்டும் காணாமல் இருந்து விடாமல் குழுக்கள் வழியாக அவற்றை சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறாக நம் மிட்ஸ் குடும்பங்கள் ஆலமரம் போல் தளைத்து வளர்ந்து அநேக நபர்களுக்கு நிழலும், பாதுகாப்பும் கொடுத்து பிறருக்கு முன் மாதிரியாக திகழட்டும் என வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்

அருட்தந்தை. **ஜாண்குமார்**
மிட்ஸ்–இயக்குநர்



# வளங்கள் நிறைந்த உலகம் படைப்போம்

அன்பான மிட்ஸ் குடும்ப உறுப்பினர்களே,

இயற்கையின் ஒரு பகுதிதான் மனிதன். ஆனால் அவன் இயற்கை மீதே போர் தொடுத்துக் கொண்டிருக்கிறான். உண்மையில் அவன், அவன் மீதே போர் தொடுத்துக்கொண்டிருக்கிறான். எந்த அளவு பூமியை நாம் அழிவுக்கு ஆட்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு அழிவு நமக்கும் ஏற்படுகிறது. களங்கமான நீர், மாசுபடுத்தப்பட்ட காற்று, பூச்சிக்கொல்லிகளால் விஷமேறிய உணவுகள், மாசடைந்த மண் என நம் சூழல் அமையும்போது நம்மை நாமே அழிவுக்கு ஆட்படுத்துகிறோம். இதனால் உயிர்க் கொல்லி நோய்கள் மனிதர்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும் விவசாயிகளிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு அது வணிகப்பொருளாக ஆக்கப்படுவது மானிட குலத்தின் சீரழிவுக்கான அடையாளம். இதனை அறிந்தும் நாம் இயற்கை வளங்களை சீரழித்து வருகிறோம்.

எளிமையான அமைப்பினை கொண்ட உயிரினமான மண்புழு ஆற்றியது போன்றதொரு முக்கிய பங்கினை உலக வரலாற்றில் பிற உயிரினங்கள் ஆற்றினவா? இயற்கையை பராமரிக்க மனிதருக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய ஒரே வழி அவர்கள் குழந்தைகளாக இருக்கும் போதே அதை சொல்லித் தருவதுதான். எதிர்கால தலைமுறையினரை வளம் நிறைந்த பூமியில் வாழ வைக்க வேண்டுமானால் நாம் காலம் தாழ்த்தாமல் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும். முயற்சி என்பது விதை அதை விதைத்துக் கொண்டே இரு. முளைத்தால் மரம் இல்லாவிட்டால் மண்ணிற்கு உரம் என்பது போல நாம் எடுக்கும் முயற்சிகளால் நாட்டை பாதுகாக்க இயலாவிட்டாலும் நம் குடும்பத்தையாவது பாதுகாக்க இயலும். எனவே இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொரு வாசகர்களும் நமது பூமியை பாதுகாக்க நம்மால் இயன்ற முயற்சிகள் மேற்கொள்வோம்.

எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாக தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அப்போது நம் இறைவன் நம்மை நேர்பாதையில் வழிநடத்துவார். இந்நாட்களில் எல்லாவித சந்தோஷங்களும் உங்கள் குடும்பங்களில் நிலவ வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

அருட்தந்தை. **அருள் ஷைஜு**
ஆசிரியர்

**ஆற்றலுக்கு மேலும் கீழும் சந்தர்ப்பங்கள் என்னும் சக்கரங்கள் சுழன்று கொண்டு இருக்கின்றன.**



# பெண்மையை போற்றுவோம்...........

*பெண் என்பவள் சக்தியின் அம்சம்*
*உலகின் இயக்கத்திற்கு தேவையான சக்தியை அளிக்கும்*
*சர்வ வல்லமை படைத்தவள் பெண்*

ஆண்களுக்கு இணையாக பெண்களும் தங்கள் உரிமைகளை கேட்டு போராடி வெற்றி பெற்றதனை நினைவுபடுத்த தான் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் எட்டாம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் களியக்காவிளை மற்றும் மார்த்தாண்டம் மண்டல பயனாளிகளை ஒன்றிணைத்து மார்ச் மாதம் எட்டாம் நாள் மிட்ஸ் கலையரங்கில் வைத்து மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மிட்ஸ் இணை இயக்குநர் அருட்தந்தை அருள்ஷைஜூ, மரியகிரி கத்தோலிக்க கல்லூரியின் பேராசிரியை திருமதி. ராஜகுமாரி, தமிழ்நாடு பெண்கள் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களான திருமதி. ஷோபனம், திருமதி. இந்திரா மேபல், திருமதி. புஷ்பம் ஆகியோருடன் தமிழ்நாடு சமூக சேவை மையத்தின் திட்ட அலுவலர் திருமதி. ஆனி அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். காலை 10.30 மணியளவில் மிட்ஸ் இயக்குநர் அவர்கள் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியினை துவங்கி வைத்தார்கள். பின்னர் சிறப்பு விருந்தினர் அவர்கள் பெண்களின் சிறப்புகள், முன்னேற்றங்கள் குறித்து உரையாற்றியதோடு தற்போதைய பெண்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்தும் அவற்றை எதிர்கொண்டு வெற்றி பெற பெண்கள் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்றும் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து திருமதி. ராஜகுமாரி அவர்கள் பெண்கள் தின செய்தியளித்தார்கள். பின்னர் கிரேஸ் நர்சிங் கல்லூரியின் நிறுவனர் திருமதி. கிரேஸ் போன்ஸ் ஜாய் அவர்கள் தனது வெற்றி அனுபவங்களையும், பெண்கள் எவ்வாறு செயல்பட்டால் வெற்றியாளர்களாக மாற முடியும் என்றும் கருத்துரை வழங்கினார்கள். பின்னர் விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு தேசிய கீதத்துடன் விழாவானது நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 240 பெண்கள் கலந்து கொண்டனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. வினிதா, ஆனிமேட்டர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.








"ஒரு சமுதாயத்தில் பிரபலமான சாதனை படைக்கும் மனிதர்கள் உருவாக வேண்டுமென்றால் அந்த சமுதாயம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்த சமுதாயமாக இருக்க வேண்டும்"

– சமூக விஞ்ஞானி ராபர்ட் இங்கர்சால்

**உங்கள் தவறை நியாயபடுத்தும் நண்பனை விடவும் அதை சுட்டிக்காட்டி திருத்தும் நண்பன் தான் சிறந்தவன்.**


# புதுமைப்பெண்

மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையமும், நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி சமூகப் பணித்துறையும் இணைந்து "புதுமைப்பெண்" என்னும் தலைப்பில் நடத்திய விழிப்புணர்வு முகாமானது 09.03.2019 அன்று மாத்தூர்கோணம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வானது மதியம் 2 மணி அளவில் நாஞ்சில் கலைக் கல்லூரி சமூகப்பணித்துறை மாணவிகளின் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியில் மார்த்தாண்டம் சமூக சேவை மையத்தின் (MIDS) இணை இயக்குநர் அருட்தந்தை அருள் ஷைஜு அவர்களும், திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் மற்றும் அமைப்பாளர் திருமதி. ஷகிலா அவர்களும் கலந்து கொண்டனர். பின்னர் முன்னாள் பேராசிரியர் திரு. ஜூலியஸ் பாண்டியன் அவர்கள் தன் சுத்தம் மற்றும் நவீன கால நோய்களான இரத்த அழுத்தம், நீரழிவு நோய், துரித உணவினால் ஏற்படும் நோய்கள் மற்றும் வீட்டு சுற்றுப்புற தூய்மையைப் பற்றியும் எளிய முறையில் பெண்களுக்கு சிறப்புரையாற்றினார்கள். இக்கருத்தரங்கு பெண்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பின்னர் திருமதி.ஷகிலா அவர்கள் நன்றி கூற மாலை 4 மணியளவில் தேசிய கீதத்துடன் கூட்டமானது முடிவுற்றது. இக்கூட்டத்தில் 80 பெண்கள் பங்கெடுத்து பயன் பெற்றனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாஞ்சில் கத்தோலிக்க கலை கல்லூரி சமூகப்பணித்துறை மாணவிகளான செல்வி. ஷீபா றோஸ், செல்வி. மீகா பிரிஸ்கில்லா, செல்வி.ஷாமினி ஆகியோர் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.





# கடிக்க சிரிக்க.....



மனைவி : டிபன் வேணுமா?
கணவன் : சாய்ஸ் இருக்கா?
மனைவி : ரெண்டு இருக்கு.
கணவன் : என்னென்ன?
மனைவி : வேணுமா? வேண்டாமா?

அம்மா : டேய்...... கண்ணா, கடைக்குப் போயி நாலு நாட்டுக்கோழி முட்டை வாங்கிட்டு வாடா.
மகன் : "சரிம்மா.....! அந்த நாலு நாடும் எது எதுன்னு பேரைச் சொல்லுங்கம்மா !

மாணவன் : செய்யாத தப்புக்கு தண்டனை தருவீங்களா சார்?
ஆசிரியர் : தரமாட்டேன் ஏன்?
மாணவன் : நான் Home Work செய்யலை சார்!

நம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம், ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புக்கள் உள்ளன,



# இயற்கை சீற்றம்

**இயற்கையை நாம் நேசிக்க மறந்ததால் - அது**
**நம்மை யோசிக்க வைக்குது**
**கடமையை செய்ய காலந்தாழ்த்தினால்**
**உடைமையை மட்டுமல்ல - உயிரையும்**
**இழப்போமென்று**

# சிறந்த பணியாளர் விருது

மலங்கரை சபைக்குட்பட்ட சமூகப்பணி மைய இயக்குநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சங்கமம் பரிவர்த்தன் 2019 என்ற பெயரில் திருவனந்தபுரம் மார் கிரகோரியஸ் புதுப்பித்தல் மையத்தில் வைத்து 19.02.2019 அன்று நடைபெற்றது. இதில் மிட்ஸ் இணை இயக்குநர் அருட்தந்தை அருள் ஷைஜு மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 13 பேர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் சிறந்த பணியாளர் மற்றும் பணி மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள்.




## தகவல் அறிவோம்

- இரத்தத்தின் pH மதிப்பு
  7.3 – 7.5
- உமிழ்நீரில் காணப்படும் என்சைம்
  டயலின்
- இந்திய தேசத்தின் மூவர்ண கொடியை தோற்றுவித்தவர்
  காந்திஜி
- இந்தியாவின் பழமையான பொது அஞ்சல் அலுவலகம் எங்கு அமைந்துள்ளது?
  சென்னை
- சென்னை மாகாணம் எந்த ஆண்டு தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது?
  1969
- இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகளின் எண்ணிக்கை எத்தனை?
  22
- 2019 – ம் ஆண்டு உலககோப்பை கிரிக்கெட் நடைபெற உள்ள நாடு எது?
  இங்கிலாந்து
- ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மரபு சார்ந்த பண்புகளை எடுத்துச் செல்லும் செல்லின் உறுப்பு?
  சைட்டோபிளாசம்
- பழ உற்பத்தியில் உலக அளவில் இந்தியாவின் இடம்?
  இரண்டாவது

**உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது. அதை வெற்றி கொள்ளும் ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது.**

# வாழ்க்கை படிகள்....

மேல்நிலை பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் தங்கள் இலக்கை அடைய சரியான வழிகாட்டுதல் இல்லாமல் தவிக்கும் தருணங்களில் கைகொடுத்து சரியான வழியில் பயணிக்க செய்வது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இந்த வருடம் 12–ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கு உயர் கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி 22.03.2019 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இப்பயிற்சினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை. ஜாண்குமார் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் பயிற்சியின் நோக்கம் பற்றி கூறினார்கள். பின்னர் சிகரம் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை செபாஸ்டின் அவர்கள் மாணவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் விதத்தில் பல்வேறு நபர்களின் வாழ்க்கை சரிதைகளை எடுத்துக் கூறியதுடன், மாணவர்கள் பாடங்களை பிறரின் தூண்டுதலின் படி தேர்ந்தெடுக்காமல் தங்களுக்கு பிடித்த பாடங்களை தங்கள் முழு விருப்பத்துடன் தேர்வு செய்தால் மட்டுமே வெற்றியடைய முடியும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள். மேலும் எந்தெந்த படிப்புகளுக்கு எந்தெந்த துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிகம் என்பது குறித்தும் தெளிவாக எடுத்துக்கூறினார்கள். பின்னர் கன்னியாகுமரி சமூக கல்லூரியின் இயக்குநர் திரு. அருள் ஜஸ்டின் தாஸ் அவர்கள் CA படிப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார்கள். தொடர்ந்து மாணவ மாணவிகளின் கருத்துகளும், சந்தேகங்களும் கேட்டறிந்து பதிலளிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் பயிற்சியினை குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்தார்கள். பிற்பகல் 3.30 மணியளவில் தேசிய கீதத்துடன் பயிற்சியானது முடிவுற்றது. இப்பயிற்சியில் மொத்தம் 123 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், இணை இயக்குநர் அருட்தந்தை அருள் ஷைஜு, திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், திருமதி. வினிதா ராணி, மற்றும் மிட்ஸ் பணியாளர்களால் மிகவும் சிறப்பான முறையில் செய்யப்பட்டிருந்தது.







இந்த உலகில் நீ மாற்றத்தை விரும்பினால் அதை முதலில் உன்னிடமிருந்து ஆரம்பி



**சுமைகளை கண்டு நீ துவண்டு விடாதே**
**இந்த உலகத்தை சுமக்கும் - பூமியே**
**உன் காலடியில் தான்**
**- விவேகானந்தர்**

## கவிதை தொகுப்புகள் - தளிர்கள் உலகம்

### மனித இலட்சியம்

பாதையில் ஏற்றம் இறக்கம் வருவது போல
வாழ்க்கையில் வருவது இன்பம் துன்பம்
அதனை ஏற்று சாதிப்பது மனித இலட்சியம்
சிகரத்தை நோக்கி அடியெடுத்து வை
முன்னால் நிற்கும் தடைகளைத் தகர்த்தெறி
வாய்ப்பு என்னும் மேடையை பயன்படுத்து
கல்வியை உயர்வாய் நேசி
இலட்சியம் நிறைவேறும்.



**S.A. ஆஷா**
வகுப்பு V

### உழைப்புடன் உயர்வோம்



கதிரவன் தோன்றும்
காலையிலே
விழிப்புடன் எழுவோம்
விடியலிலே
காகம் கரையும்
காலையிலே
கருத்தாய் இருப்போம்
வேலையிலே
காலையில் வீசும்
தென்றல்
மாலையில் வீசும் சாரல்
துயரத்தை மறப்போம்
துடிப்புடன் உயர்வோம்

**A. அபிதா**
**வகுப்பு VIII**

### தளிர்கள் உலகம்



அகலாகி தீபமாகி
அன்பிற்கு ஊற்றாகி
கனலாகி நெருப்பாகி
கவிதைக்கு இறகாகி
வானாகி மேகமாகி
வாழ்விற்கு விளக்காகி
உடலாகி உயிராகி
உயிர் வாழ பொருளாகி
சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கி
சிரித்த முகமாய் பேசி
மகிழ்வித்த தளிர்கள் உலகத்தை
மனதார நேசிப்போம்!

**J.L. ஜெமி**
**வகுப்பு XII**

### நட்பு



என் ஆயுள் முழுவதும்
உன் நட்பு நீடிக்க
வேண்டும்
இல்லையெனில்
உன் நட்பு உள்ளவரை
என் ஆயுள் இருக்க
வேண்டும்

**R. ரித்திகா**
**வகுப்பு V**

**உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்யக்கூடாது.**

# உயர்கல்விக்கு வழிகாட்ட.......

இந்த ஆண்டு 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 01.04.2019 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தேசிய கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை ஆண்டனி ராஜ் ஆகியோர் பயிற்சியினை குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தனர். பின்னர் அன்னை ஆதா பயிற்சி நிலையத்தின் இயக்குநர் அருட்தந்தை றாபின்சன் அவர்கள் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வீடியோக்கள், SWOT Analysis, நேர மேலாண்மை, கடின உழைப்பு, விருப்பப்பட்டு படித்தல், வாழ்க்கையில் இலட்சியத்தை அடைவது எப்படி, பயத்தை போக்கும் வழிகள், தோல்வியை எதிர்த்து போராடுவது எப்படி என்பது குறித்த தகவல்களையும், மேற்படிப்புக்கான பல்வேறு துறைகள், அவற்றிற்கான வேலை வாய்ப்புகள், நுழைவு தேர்வுகளின் வகைகள் மற்றும் அவைகளின் விரிவாக்கங்கள் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு புரியும் விதத்தில் மிகவும் தெளிவாக பயிற்சியளித்தார்கள். இப்பயிற்சியின் வழியாக மாணவர்கள் தங்கள் எதிர்கால கனவுகளை நனவாக்க எந்தெந்த துறைகளை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் என்ற நல்லதொரு தெளிவு கிடைத்ததாக கருத்து தெரிவித்தனர். அத்துடன் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பின்னர் மாலை 3.30 மணியளவில் பயிற்சியானது முடிவுற்றது. இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், திருமதி. வினிதா ராணி மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.





**முயற்சி**

எட்டிப்போனாலும் தொடலாம் பட்டுப்போனாலும் நடலாம்
தட்டிப்போனாலும் எழலாம் முயற்சி இருந்தால்

உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

# இயற்கை வேளாண்மை

வேளாண்மையில் செயற்கையான வேதிப் பொருட்களை பயன்படுத்தாமல் இயற்கையோடு இணைந்து இயற்கையின் போக்கில் விவசாயம் செய்வது இயற்கை வேளாண்மை ஆகும்.

**இயற்கை வேளாண்மையின் கூறுகள்**



1. நிலத்தை தயார் செய்தல்
2. ஒற்றை நடவுமுறை
3. பயிர் சுழற்சி முறை
4. கலப்பு பயிரிடுதல்
5. இயற்கை பூச்சி விரட்டிகளை பயன்படுத்தல்
6. மூடாக்கி போடுதல்
7. இயற்கை உரங்களை போடுதல்
8. இயற்கை பயிர் ஊக்கிகளை பயன்படுத்துதல்
9. பயிர்களுக்கு தேவையான காற்றோட்டத்தை பராமரிப்பது
10. நாட்டு விதைகளை பயன்படுத்துதல்

**நிலத்தை தயார் செய்தல்**

பயிர் வளர்வதற்கு ஏற்றவாறு நிலத்தை தயார் செய்ய வேண்டும். நிலமானது உழுவதற்கு எளிதாகவும், பஞ்சு போல் மிருதுவானதாகவும் இருக்க வேண்டும்.

**பயிர் சுழற்சி முறை**

நெல் பயிர் சாகுபடிக்கு பின் உளுந்து, எள், துவரை, பருத்தி போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை பயிர் செய்யலாம். பயிர் செய்யும் நிலத்தின் தன்மை, நீரின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ளலாம். இதன் வழியாக இழந்து போன நிலத்தின் வளத்தினை மீட்டெடுக்கலாம்.

**கலப்பு பயிரிடுதல்**

பருத்தியுடன் உளுந்து, துவரை பயிர்களை கலந்து பயிர் செய்வது, மிளகாயுடன் அகத்தியை பயிர் செய்வது போன்றவையாகும். இவ்வாறு செய்வதால் விளைச்சலை அதிகப்படுத்தி, தீமை செய்யும் பூச்சிகளையும் விரட்டலாம்.

**மூடாக்கிப் போடுதல்**

பயிர்களுக்கு இடையே இலை, தழை, கரும்பு சோகை ஆகியவற்றைக் கொண்டு மூடுதல் ஆகும். இதனால் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்பட்டு மண்புழுக்கள் வளர துணை செய்வதோடு, களைகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். மேலும் மண்ணின் இயற்கை தன்மை பாதுகாக்கப்பட்டு அதிக விளைச்சல் பெறலாம்.

**இயற்கை உரங்களை பயன்படுத்துதல்**

மண்புழு உரம், தொழு உரம், சாண எரு உரம், பசுந்தழை உரம் ஆகியவற்றை பயன்படுத்தும் போது குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறுவதோடு ஆரோக்கியமான உணவு பொருட்களையும் பெறலாம்.

**இயற்கை பயிர் ஊக்கிகளை பயன்படுத்துதல்**

பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து அதிக விளைச்சலை தர இயற்கை பயிர் ஊக்கிகளான தேங்காய் பால் மோர், அமிர்தக்கரைசல், பஞ்சகவ்யா போன்ற இயற்கை பயிர் ஊக்கிகளை பயன்படுத்த வேண்டும்.

**பயிர்களுக்கு தேவையான காற்றோட்டத்தை பராமரிப்பது**

நெல்லுக்கு நண்டோட, கரும்புக்கு ஏரோட, வாழைக்கு வண்டியோட, தென்னைக்கு தேரோட என்னும் பழமொழிகளுக்கு ஏற்ப பயிரின் வகைகளைப் பொறுத்து அவைகளின் தேவைகளுக்கு ஏற்ப இடைவெளி விட்டு பயிர் செய்ய வேண்டும்.

**நாட்டு விதைகளை பயன்படுத்துதல்**

தரமான நாட்டு விதைகளை பயன்படுத்தி இயற்கை முறையில் வேளாண்மை செய்வதன் மூலம் அதிகமான விளைச்சலுடன் தரமான விதைகளை பெற முடியும்.

**இயற்கை வேளாண்மையின் பயன்கள்**

இம்முறையை பயன்படுத்துவதால் மண், நீர், காற்று மற்றும் ஆகாயம் ஆகியவை பாதுகாக்கப்படுகின்றன. பயனீட்டாளர்களுக்கு உடல் நலத்திற்கேற்ற உணவு கிடைக்கிறது. விவசாயிகள் அதிக விளைச்சலுடன் நல்ல இலாபத்தையும் பெறுகின்றனர் முக்கியமாக நமது அடுத்த தலைமுறைக்கு மாசற்ற வேளாண் முறையை தருவதோடு ஆரோக்கியமான உணவுக்கும் வழி வகை செய்கிறோம்.

**வெற்றியை விட தோல்விக்கு பலம் அதிகம், வெற்றி சிரித்து மகிழ வைக்கும், தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்.**

## சிறந்த சமூகப்பணி மைய விருது

மிட்ஸ் நிறுவனமானது ஐ.சிஐ.சி.ஐ வங்கியுடன் நேரடி தொடர்பு கொண்டு சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கி வருகின்றது. கடந்த நிதியாண்டில் மட்டும் ஐ.சிஐ.சி.ஐ வங்கியானது 102 மிட்ஸ் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 5,14,23,700/– கடன் வழங்கியுள்ளது. நிலுவையில்லாமல் வங்கி கடன்களை குறிப்பிட்ட தவணைகளில் கட்டி முடிப்பதில் மிட்ஸ் நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்திலேயே முதன்மையான நிறுவனமாக திகழ்ந்து வருகிறது. எனவே மிட்ஸ் நிறுவனத்தை கவுரவிக்கும் வகையில் ஐ.சிஐ.சி.ஐ வங்கியானது 11.09.2018 அன்று மிட்ஸ் நிறுவனத்திற்கும், சுய உதவிக்குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் அமைப்பாளர்களுக்கும் விருது வழங்கி கவுரவித்தது.






## வாக்காளர் விழிப்புணர்வு முகாம்

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்குரிமை பெற்ற அனைத்து குடிமக்களும் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக 05.04.2019 அன்று குழித்துறை ஹோமில் வைத்து மிட்ஸ் நிறுவனத்தின் சார்பாக அதன் சுய உதவி குழு பொறுப்பாளர்களை ஒன்றிணைத்து வாக்காளர் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் தமிழக சமூக சேவை மையத்தின் திட்ட அலுவலர் திருமதி. ஆனிறோஸ் மற்றும் கோட்டார் மறைமாவட்டத்தை சார்ந்த வழக்கறிஞர் அருட்தந்தை ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். அருட்தந்தை ராஜன் அவர்கள் 100% மக்களும் வாக்களிக்க வேண்டும் என்றும் பணம் மற்றும் இலவசங்களை நம்பி ஏமாந்து போகாமல் மதசார்பற்ற நல்ல தலைவர்களுக்கு நமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். தொடர்ந்து திருமதி. ஆனி றோஸ் அவர்கள் சுய உதவி குழுக்கள் வழியாக அனைத்து மக்களுக்கும் வாக்களிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி நாட்டுக்கும், மக்களுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நாடாளுமன்ற தேர்தலில் மதசார்பற்ற தலைவர்களுக்கு வாக்களித்து மக்களையும், நாட்டையும் பாதுகாப்போம் என்று கூறினார்கள். அதை தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் அவர்கள் வருகை தந்து எதிர்வரும் தேர்தலில் சமய, சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் நோக்கத்தில் வலிமை படைத்த சக்திகளுடன் நாம் கரம் கோர்க்க வேண்டும் என்றும் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்றும் ஊக்கப்படுத்தினார்கள். பின்னர் தேசிய கீதத்துடன் கூட்டமானது முடிவுற்றது. இம்முகாமில் 350–க்கும் மேற்பட்ட சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், அமைப்பாளர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.





வெற்றியோ, தோல்வியோ எதுவரினும் கடமையை செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும் போது பகைவனும் நம்மை மதிக்க தொடங்குவான்.

– அம்பேத்கர்

**பசித்த வயிறு, பணமில்லா வாழ்க்கை, பொய்யான உறவுகள் இவை கற்றுத்தரும் பாடத்தை, யாராலும் கற்றுத்தர முடியாது.**


## ஒரே கல்லில் இரண்டு மாங்காய்

உங்கள் மாடித் தோட்டத்திற்கு உரமும் வேண்டும். சுற்றுச்சூழலுக்கு உதவியும் செய்ய வேண்டும். முடியுமா? நிச்சயம் முடியும். முதலில் தயார் செய்ய வேண்டியது உங்கள் சமையலறையில் இரண்டு குப்பைத் தொட்டி வைக்க வேண்டும். மட்காத குப்பைகளை ஒரு தொட்டியில் வைத்து கொட்டி விட வேண்டும். மட்குகின்ற காய்கறி கழிவுகள், பழத்தோல்கள் முதலிய குப்பைகளை ஒரு தொட்டியில் போட்டு வைக்க வேண்டும். சில நாட்களில் அவை நன்றாக மட்கி விடும். பின்பு அதை உரமாக பயன்படுத்தலாம். இப்படி செய்வதால் நமக்கு இயற்கை உரம் கிடைப்பதோடு, சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்.

# மார்ச் முதல் மே வரையிலான மிட்ஸின் உதவித்திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | உறுப்பினர் எண்ணிக்கை | வழங்கிய தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 01. | மிட்ஸ் ஜீவன் | 11 | 55,000 |
| 02. | குடும்ப வளர்ச்சி திட்டம் | 05 | 96,460 |
| 03. | கல்வி உதவித்தொகை (தளிர்கள் உலகம்) | 420 | 8,40,000 |





# மார்ச் முதல் மே வரையிலான மிட்ஸின் கடன் உதவித்திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | உறுப்பினர் எண்ணிக்கை | வழங்கிய தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 04. | பசு வளர்த்தல் (கோல்பிங்) | 45 | 5,00,000 |
| 05. | கக்கறா (கோல்பிங்) | 65 | 85,00,000 |
| 06. | சிறு தொழில்கள் (கோல்பிங்) | 74 | 27,00,000 |
| 07. | விருட்சம் | 147 | 40,50,000 |





எல்லோரையும் திருப்தி பட வைக்க நினைப்பவனால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | உறுப்பினர் எண்ணிக்கை | வழங்கிய தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 08. | கல்வி கடன் உதவித்தொகை (Mandy Pickering –Pharmacy 777 Higher Education Scholarship) | 9 | 1,80,000 |
| 09. | கல்வி கடன் உதவித்தொகை (Divine Mercy Higher Education Scholarship) | 23 | 5,75,000 |
| 10. | வெள்ள நிவாரணம் _ வீடு பழுது பார்த்தல் (இரண்டாம் தவணை) | 32 | 4,80,000 |
| 11. | விருட்சம் டெய்லரிங் | 69 | 6,90,000 |
| 12. | ஆடு வளர்த்தல் (Forderverin Indien Hilfe e.v.) | 11 | 68,750 |











## அழகு குறிப்புகள்


1. செம்பருத்திப்பூவை அப்படியே சாப்பிட்டால் உடல் சூடு தணிந்து முடி உதிர்வது நிற்கும்.
2. தக்காளிச்சாறு மற்றும் வெள்ளரிச்சாறை சம அளவில் எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் தடவி காய்ந்தவுடன் கழுவினால் பருக்களால் ஏற்பட்ட தழும்புகள் மாறும்.
3. உதடுகளில் வறட்சி ஏற்படாமல் இருக்க இரவில் தூங்க செல்லும் போது தேங்காய் எண்ணெயால் உதட்டில் மசாஜ் செய்து வரவும்.





4. அன்னாசி பழத்தில் சிறுநீரக கற்களின் "பைப்ரினை" சிதைக்கும் நொதிகள் உள்ளன. எனவே இப்பழம் எளிதில் சிறுநீரக கற்களை சிதைக்கும்,
5. சாப்பாட்டில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக் கொள்வது உடல் எடையை குறைக்க உதவும்.


தாங்க முடியாத அளவுக்கு நமக்கு ஒருபோதும் துன்பங்கள் ஏற்படுவதில்லை.


PARROT

















Chota Bheem














































J. Vineesh
Std : VII


GREAT MEMORY
WONDER FUL EYE
NICE EYE


by



COW

AEROPLANE



By




Art By,


## அன்பு மடல்

அன்பான சுய உதவி குழு உறுப்பினர்களே, கடந்த பிப்ரவரி மாதம் 01,02, மற்றும் 04 ஆகிய தியதிகளில் களியக்காவிளை, மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவில் மணடலங்களுக்கு உட்பட்ட 100 பகுதிகளில் நடைபெற்ற புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் புற்றுநோயாளிகளுக்கு உதவுவதற்கான நிதி சேகரிப்பிலும் தாங்கள் மிட்ஸ் பணியாளர்களோடு மிகவும் அர்பணிப்பு உள்ளத்தோடு கலந்து கொண்டு செயலாற்றினீர்கள். தங்களின் முழு ஒத்துழைப்பிற்கும், உதவிகளுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இது போன்ற நல்ல செயல்பாடுகளுக்கு தங்களின் முழு ஒத்துழைப்பையும் நல்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அன்றைய தினம் சேகரிக்கப்பட்ட நிதியானது மிட்ஸ் ஜீவன் என்ற பெயரில் மிட்ஸ் உறுப்பினர்களின் குடும்பங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவ செலவிற்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அந்நாட்களில் சேகரிக்கப்பட் நிதி நிலவரம் வருமாறு

| மண்டலம் | சேகரிக்கப்பட்ட தொகை |
|---|---|
| களியக்காவிளை | ரூ. 2,98,205 |
| மார்த்தாண்டம் | ரூ. 1,02,323 |
| நாகர்கோவில் | ரூ. 1,40,039 |
| மொத்தம் | ரூ. 5,40,567 |

நன்றி









### குழந்தைகளுக்கு பருப்பு சாதம் செய்யப் போகிறீர்களா...........

கொஞ்சம் பொறுங்கள். பருப்பை வேக வைக்கும் போது முருங்கை காயின் நடுவில் இருக்கும் சதைப்பகுதியை சுரண்டி பருப்போடு சேர்த்து வேக வைத்து சாதத்துடன் பிசைந்து ஊட்டுங்கள். புரதச்சத்தோடு, இரும்புச்சத்தும் சேர்ந்து கிடைப்பதோடு மிகவும் சுவையாகவும் இருக்கும்.

விதி ஆயிரம் கதவுகளை மூடினாலும் முயற்சி ஒரு ஜன்னலையாவது திறக்கும்.







# ஐக்கிய சுடர்







நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : (04652) 233853